Type	Sample English sentence	Sample Tamil Sentence
காலம் (Tense)		
Noun becomes **Subject** [This section gives clear idea on **Tense**]	He/She/It is coming They are coming	<u>உயர்திணை:</u> அவன் வருகிறான் / வருகின்றான் / வந்துகொண்டிருக்கிறான் / வந்துகொண்டிருக்கின்றான் அவள் வருகிறாள் / வருகின்றாள் / வந்துகொண்டிருக்கிறாள் / வந்துகொண்டிருக்கின்றாள் அவர் வருகிறார் / வருகின்றார் / வந்துகொண்டிருக்கிறார் / வந்துகொண்டிருக்கின்றார் அவர்கள் வருகிறார்கள் / வருகின்றார்கள் / வந்துகொண்டிருக்கிறார்கள் / வந்துகொண்டிருக்கின்றார்கள் <u>அஃறிணை:</u> அது வருகிறது / வருகின்றது / வந்துகொண்டிருக்கிறது / வந்துகொண்டிருக்கின்றது அவை வருகின்றன / வந்துகொண்டிருக்கின்றன
	He/She/It/They came	<u>உயர்திணை:</u> அவன் வந்தான் / அவள் வந்தாள் / அவர் வந்தார். அவர்கள் வந்தார்கள்(வந்தனர் is also correct) <u>அஃறிணை:</u> அது வந்தது / அவை வந்தன
	1) He/She/It/They will come 2) He/She/It/They will walk	<u>உயர்திணை:</u> 1) அவன் வருவான் / அவள் வருவாள் / அவர் வருவார் / அவர்கள் வருவார்கள் 2) அவன் நடப்பான் / அவள் நடப்பாள் / அவர் நடப்பார் / அவர்கள் நடப்பார்கள். <u>அஃறிணை:</u> 1) அது வரும் / அவை வரும். 2) அது நடக்கும் / அவை நடக்கும்.

Type	Sample English sentence	Sample Tamil Sentence
வேற்றுமை உருபுகள்		
எதை, யாரை (ஐ)	**1) He hit the ball** **2) King built temple** (Develop/Build/Prepare) **3) Ghost destroyed temple** (Destroy) **4) King reached forest** (Reach) **5) He came out of house** (Leave/came out of it) **6) He is like tiger** (compare)	**1) அவன் பந்தை அடித்தான் (அவன் அந்தப் பந்தை அடித்தான்** is also correct**).** **2) அரசர்/அரசன் கோவிலைக் கட்டினான்/கட்டினார்.** **3) பேய் கோவிலை இடித்தது.** **4) மன்னர் காட்டை அடைந்தார் (மன்னர் காட்டிற்குச் சென்று சேர்ந்தார்** is also correct**).** **5) அவன் வீட்டை விட்டு வெளியே வந்தான் (அவன் வீட்டிலிருந்து/வீட்டினுள்ளிலிருந்து வெளியே வந்தான்** is also right**).** **6) அவன் புலியைப் போன்றவன்.**
எதனால்/எதனோடு, யாரால்/யாரோடு (ஆல், கொண்டு, ஓடு, உடன்)	**1) She hit the ball by bat** **2) Statue was carved by sculptor** **3) Valluvar Kottam was built by Tamilnadu government** **4) Students came with teacher**	**1) அவள் பந்தை மட்டையால் அடித்தாள் (**மட்டை கொண்டு என்றும் கூறலாம்**)** **2) சிலை சிற்பியால் செதுக்கப்பட்டது (சிற்பி சிலையைச் செதுக்கினார்** is also correct**)** **3) வள்ளுவர் கோட்டம் தமிழக அரசால் கட்டப்பட்டது (தமிழக அரசு வள்ளுவர் கோட்டத்தைக் கட்டியது** is also correct**)** **4) மாணவர்கள் ஆசிரியரோடு வந்தனர்/வந்தார்கள் (ஆசிரியருடன்** is also correct**)**
கொடுத்தல்/Giving, தகுதி/Personality, உறவு/Relationship (க்கு)	**1) She gave him wrist watch (**Giving**)** **2) Humanity is best quality for Human (**Personality**)** **3) He is my friend (**Relationship**)** **4) Manimegali is daughter of Madhavi (**Relationship**)**	**1) அவள் அவனுக்குக் கைக்கடிகாரம் கொடுத்தாள் (அவள் அவனிடம் கைக்கடிகாரம்/கைக்கடிகாரத்தைக் கொடுத்தாள்** is also correct**).** **2) மனிதருக்கு அழகு பிறருக்கு உதவுதல்** **3) அவன் எனக்கு நண்பன் (அவன் எனது/என்னுடைய/என் நண்பன்** is also correct**)** **4) மாதவிக்கு மகள் மணிமேகலை (மாதவியின் மகள்** is also correct**)**

Type	Sample English sentence	Sample Tamil Sentence
நீங்கல்/From, ஒப்பு/Compare (இல், விட/காட்டிலும்)	1) Water drips from the pipe 2) He retired from his job 3) My brother is taller than me	1) குழாயிலிருந்த நீர் வடிகிறது (குழாய்க்குள்ளிருந்து is also correct) 2) அவன் பணியிலிருந்து ஓய்வு பெற்றான். 3) என் சகோதரன் என்னை விட உயரமானவன் (என்னைக் காட்டிலும் is also correct)
உடைமை (அது, உடைய)	1) His/Her/Their book 2) My Book 3) That book is mine 4) He is my friend	1) அவனுடைய/அவனது/அவன் புத்தகம் அவளுடைய/அவளது/அவள் புத்தகம் அவருடைய/அவரது/அவர் புத்தகம் அவர்களுடைய/அவர்களது புத்தகம் 2) எனது/என்னுடைய/என் புத்தகம். 3) அது எனது/என்னுடைய/என் புத்தகம். 4) அவன் எனது/என்னுடைய/என் நண்பன் (அவன் எனக்கு நண்பன் is also correct)
இடம்/Place (இடம், இல், இன், கீழ், மேல்/மேலே, உள்/உள்ளே)	1) She has two dogs 2) Fishes swim in the pond 3) Pond is in middle of the town 4) Cup is on the Table 5) Cat si under the table 6) My book is in his bag	1) அவளிடம் இரண்டு நாய்கள் உள்ளன (அவள் இரண்டு நாய்கள் வைத்திருக்கிறாள் is also correct). 2) குளத்தில் மீன்கள் நீந்துகின்றன (குளத்தின் உள்ளே / குளத்துக்குள்ளே are also correct). 3) ஊர் நடுவில் குளம் (ஊருக்கு நடுவில்/நடுவிலே is also correct) 4) கோப்பை மேசையின்/மேசைக்கு மேல்/மேலே இருக்கிறது. 5) பூனை மேசையின்/மேசைக்குக் கீழ்/கீழே இருக்கிறது. 6) எனது/என் புத்தகம் அவனுடைய/அவனது/அவன் பையில்/பைக்குள்/பைக்குளே இருக்கிறது.